11.2.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### இலவச காளான் வளர்ப்பு பயிற்சி: ஈரோட்டில் பிப்ரவரி 18-இல் தொடக்கம்

ஈரோட்டில் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி பிப்ரவரி 18-ஆம் தேதி தொடங்கவுள்ளது. மத்திய அரசின் கிராமப்புற அமைச்சக வழிகாட்டுதலின்படி, கனரா வங்கி தொழில் பயிற்சி நிலையம் சார்பில் இப்பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. பிப்ரவரி 18-ஆம் தேதி துவங்கும் இப்பயிற்சி 24-ஆம் தேதி வரை ஈரோடு, அசோகபுரம் ஸ்ரீ சரஸ்வதி வித்யாலாயா சிறுவர் பள்ளி வளாகத்தில் நடைபெற உள்ளது. இதில், விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் சுயஉதவிக்குழுவினர் பங்கேற்றுப் பயன்பெறலாம். இப்பயிற்சியைப் பெற தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்கவேண்டும். வயது வரம்பு இல்லை. இப்பயிற்சி யின் போது, மதிய உணவு உள்பட அனைத்தும் இலவசம். பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். கூடுதல் விவரம் அறிய 0424-2290338 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று கனரா வங்கி முதுநிலை மேலாளர் பூபாலன் தெரிவித்துள்ளார்.

### அரியலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நாளைமுதல் பருத்தி ஏலம்

அரியலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் புதன்கிழமை (பிப். 11) முதல் பருத்தி ஏலம் தொடங்குகிறது என்றார் ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ். அண்மைக்காலமாக பருத்தி விலை வீழ்ச்சி விவசாயிகளை கவலையடையச் செய்துள்ளது. இதையடுத்து, பருத்தி

விவசாயிகள் ஆட்சியர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற விவசாயி கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், தற்போது அறுவடையாகி வரும் பருத்தியை மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதாரவிலைக்கு குறையாமல் விற்றுக்கொடுக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தனர். இதைத் தொடர்ந்து, அரியலூர் மாவட்ட பருத்தி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை அலுவலர்கள் ஆகியோரை அழைத்து ஆட்சியர் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தினார். கூட்ட முடிவில் ஆட்சியர் கூறியது: அரியலூரில் அமைந்துள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மறைமுக ஏல முறையில் விற்பனைப் பரிவர்த்தனை தொடங்க தீர்மானிக்கப் பட்டது. அதன் அடிப்படையில் பிப். 11 ஆம் தேதி முதல் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை அரியலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மறைமுக ஏலம் முறையில் வணிகத்தை தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து வியாபாரிகள் வந்து பங்கேற்கின்றனர். இந்த ஏல முறை வணிகத்தில் அரியலூர் மாவட்ட பருத்தி விவசாயிகளும் பங்கேற்று தங்களது பருத்தி பஞ்சை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நடைபெறவிருக்கும் மறைமுக ஏலத்தில் விற்று பயனடையலாம். மேலும், தரமான பஞ்சுக்கு நல்ல விலை கிடைக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. எனவே, விற்பனைக்கு எடுத்து வரும் பருத்தி பஞ்சின் தரத்தை உறுதி செய்துகொள்ள வேண்டும். பஞ்சுகள் தூசு இன்றி தூய்மையாக வெண்மையாக இருக்க வேண்டும். பஞ்சை நிழலில் உலர்த்தி விற்பனைக்கு கொண்டுவர வேண்டும். ஈரப்பதம் 8 சதவீதத்துக்கும் குறைவாக இருக்க வேண்டும் என்றார் ஆட்சியர்.

# இன்றைய வேளாண் செய்திகள்

## கரும்பு நாற்று நடவுமுறை குறித்து விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம்

திருத்தணி: கரும்பு நாற்று நடவுமுறை குறித்து, விவசாயிகளுக்கு, செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் நிர்வாக இயக்குனர் மலர்விழி உத்தரவின் பேரில், திருத்தணி அடுத்த, கே.ஜி.கண்டிகையில், கரும்பு நாற்று நடவுமுறை செயல்முறை விளக்கம் குறித்து, விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி நடந்தது. ஆர்.கே.பேட்டை கரும்பு அலுவலர் அன்புதாசன், விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். இதில், விளக்கணாம்பூடி புதுார், பொதட்டூர்பேட்டை, சொரக்காய்பேட்டை, தலையாறிதாங்கல், வி.ஆர்.என்.கண்டிகை, மத்துார், கொத்துார் ஆகிய பகுதிகளில் இருந்து, 100க்கும் மேற்பட்ட கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டனர். கரும்பு நாற்று நடவுமுறையில் கரும்பு பயிரிட்டால், ஏக்கருக்கு, 100 டன்னுக்கு மேல் கரும்பு மகசூல் பெறலாம்; சாகுபடி செலவு குறைவு; பாசன நீர் மற்றும் உரத்தேவை குறைவு; கரும்பு வெட்டுவதற்கு உத்தரவு, ஒரு மாதத்திற்கு முன் கிடைக்கும்; இயந்திர அறுவடை செய்ய உகந்தது போன்ற பல்வேறு நன்மைகள் குறித்து, கரும்பு அலுவலர்கள் விவசாயிகளுக்கு எடுத்து கூறினர்.

## வரட்டுப்பள்ளம் அணையில் இன்று தண்ணீர் திறப்பு

அந்தியூர் : அந்தியூர் அடுத்த மேற்கு தொடர்ச்சி மலை வனப்பகுதியை ஒட்டி அமைந்துள்ளது வரட்டுப்பள்ளம் அணை. இந்த அணையின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும், 5,000 ஏக்கர் பாசன வசதி பெருகிறது. கடந்த, மூன்று ஆண்டுகளாக பருவமழை பொய்த்துப்போனதால்,

அணைக்கு நீர் வரத்து இல்லாததால், அணை நிரம்பவில்லை.கடந்த, மூன்று மாதங்களுக்கு முன்பு பெய்த பருவமழை மற்றும், பர்கூர் மலைப்பகுதியில் அதிக அளவு மழை பெய்ததால், கள்ளுப்பள்ளம், கும்பரவாணிபள்ளம் ஆகிய பள்ளங்கள் மூலம், நீர் வரத்து ஏற்பட்டு, அணை நிரம்பியது.தவிர, அருகில் உள்ள எண்ணமங்கலம், கெட்டி சமுத்திரம் ஆகிய ஏரிகளும் நிரம்பிய நிலையில், அணையில் இருந்து அந்தியூர் ஏரி, பிரம்மதேசம் ஏரி, வேம்பத்தி ஏரி, ஆப்பக்கூடல் ஏரி ஆகிய நான்கு ஏரிகளுக்கு, ஜனவரி, 5 முதல், 14ம் தேதி வரை தண்ணீர் திறந்து விடப்பட்டது.இந்நிலையில் வாய்க்கால் பாசனத்துக்காக, இன்று (11ம் தேதி) காலை, கலெக்டர் பிரபாகர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுகிறார்.இதனால் வட்டக்காடு, சங்கராப்பாளையம், கிழங்குகுழி, விலாங்குட்டை, ஊஞ்சகாடு, புதுமாரியம்மன் கோவில் பகுதியில், 2,000 ஏக்கர் பாசன வசதி பெறும்.

## <u>தர்பூசணி கிலோ ரூ.15க்கு விற்பனை</u>

கோபி : கோபி பகுதியில், தர்பூசணி கிலோ, 12 முதல், 15 ரூபாய்க்கு விற்பனையாகிறது. கோடை மாதமான, மார்ச் முதல் ஜூன் வரையிலான காலத்தில்தான், தர்பூசணி, இளநீர் போன்றவை அதிகமாக வரத்தாகும். நடப்பாண்டு, பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்ததால், திண்டிவனம், திருவண்ணாமலை, ஆந்திரா மாநிலம் ரேணிகுண்டா, சத்தியபுரம் போன்ற பல இடங்களில் இருந்து, தர்பூசணி அதிக அளவில் விளைச்சல் கண்டுள்ளது. தற்போது, மாநிலத்தின் பல்வேறு பகுதிக்கும், தர்பூசணி வரத்தாகிறது.கோபி பகுதியில், மிகப்பெரிய அளவில் குவித்து வைத்து தர்பூசணி விற்பனை நடக்கிறது. இதுகுறித்து, விற்பனையாளர் கலிபுல்லா கூறியதாவது:ஒரு லோடு, பத்து டன் எடையுடன், 70,000 முதல், 80,000 ரூபாய்க்கு வாங்கி வந்து விற்கிறோம்.ஒரு கிலோ, 12 முதல், 15 ரூபாய் என்ற விலையில், சில்லறை விற்பனை செய்கிறோம்.

தற்போது வரத்து அதிகமாக உள்ளதால், விலை குறைந்து காணப்படுகிறது, என்றார்.

**<u>சுற்றுச்சூழல் மேம்பாட்டு பணி; குஜராத் விவசாய குழு ஆய்வு</u>**

வேதாரண்யம் : கடற்கரையோர மண்டல மேலாண்மைத் திட்டத்தில், மத்திய சுற்றுச் சூழல் வனத்துறை, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் சுற்றுச்சூழல் மேம்பாட்டு பணிகள் நடந்து வருகிறது. இத்திட்டத்தில், நாகை மாவட்டம், வேதாரண்யம் அருகே கோடியக்காடு கிராமத்தில் உப்பளத் தொழிலாளர் களின் பகுதி நேர வாழ்வாதாரத்தை மையமாக கொண்டு, புகையிலைக்கு மாற்றுப் பயிராக, குண்டுமல்லி, செவ்வரளி மலர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தில், உலக வங்கி நிதி உதவியுடன் கடற்கரையோர சூழல் மேம்பாடு தொடர்பான பணிகளை ஆய்வு செய்து, அதனை தங்கள் பகுதியில் செயல்படுத்த குஜராத் மாநிலத்திலிருந்து விவசாயிகள் அடங்கிய குழுவினர், ஆறு நாள் பயணமாக வந்துள்ளனர். குஜராத் மாநில சுற்றுச்சூழல் ஆணையத்தைச் சேர்ந்த களப்பணி மேலாளர் லோமேஷ் தலைமையில். முன்னோடி விவசாயிகள், மகளிர் குழுக்களின் பிரதிநிதிகள் உள்பட. 31 பேர் கொண்ட குழுவினர். கோடியக்காட்டில் செய்யப்பட்டு வரும் குண்டுமல்லி, செவ்வரளி மலர் சாகுபடிகளை பார்வையிட்டனர். அவர்கள், இரண்டு நாட்களாக வேதாரண்யம் பகுதியில், நடந்து வரும் சுற்று சூழல் தொடர்பான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். வேதாரண்யம் பகுதியில் இயற்கை விவசாயத்தின் மூலம் செய்யபட்டு வரும் மலர் சாகுபடி முறை குறித்தும் கேட்டறிந்தனர்.பின்னர், கோவில்தாவு, கடினல்வயல் போன்ற கிராமங்களில் இயற்கை விவசாயப் பணிகளை பார்வையிட்டனர். சுற்றுசூழல் மேம்பாட்டு குழுக்களுக்கு பொருளாதார சுழல் நிதி அளிப்பு போன்ற திட்டங்களை கேட்டறிந்தனர்.நிகழ்ச்சியில், சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன காக்கிநாடா மைய விஞ்ஞானி ராமசுப்ரமணியன்,

வேதாரண்யம் மைய ஒருங்கிணைப்பாளர்கள் ரவிச்சந்திரன், டாக்டர் ராஜன், கிராம பஞ்சாயத்து தலைவர் பவானி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## குமரி மாவட்ட வேளாண் விளை பொருள் கண்காட்சி பிப்.,13-ல் தொடக்கம்

நாகர்கோவில்: குமரி மாவட்ட கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் நிருபர்களிடம் கூறியதாவது: விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வேளாண்துறையில் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு உணர்த்தும் வகையில் வேளாண்விளை பொருள் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 13-ம் தேதி மாலை 4 மணிக்கு நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி நூற்றாண்டு விழா அரங்கில் நØடெபறும். இதில் விளை பொருட்கள் கண்காட்சி நடைபெறும். 19 அரசு துறைகளின் ஸ்டால் இதில் இடம் பெறும். வீடியோ காட்சிகளும் திரையிடப்படும். 14-ம் தேதி மாலை ஐந்து மணி வரை கண்காட்சி நடைபெறும்.

## விதைகிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

ஆண்டிபட்டி: ஆண்டிபட்டியில் விதை கிராமத் திட்டத்தில் விவசாயிகளுக்கான பயிற்சிமுகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி தலைமை வகித்தார். இணை இயக்குனர் (பொறுப்பு) ரங்கநாதன் முன்னிலை வகித்தார். நெல் சாகுபடியில் உள்ள தொழில் நுட்பங்கள், இரு மடங்கு உற்பத்தி மும் மடங்கு வருமானம் பற்றியும், புதிதாக துவக்கப்பட்டுள்ள பயிற்சி வழி தொடர்புத்திட்டம் பற்றியும் விளக்கப்பட்டது. விதை கிராமத்திட்டத்தில் உள்ள மானிய திட்டங்கள்,பயிற்சிகள், நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டது. விதை நேர்த்தி செய்தல், நெல்லின் மூலம் பரவும் குலைநோய், செம்புள்ளி நோய், இதனை கட்டுப் படுத்தும் முறைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. பருத்தி, மக்காசோளம் பயிர்களுக்கு

சொட்டு நீர் பாசனம் அமைப்பதால் ஏற்படும் நன்மைகள், மானிய விபரங்கள் குறித்த தகவல் விவசாயிகளுக்கு தரப்பட்டது. விதை சான்று அலுவலர் ரவி, வேளாண்மை அலுவலர் முருகன், <உதவி வேளாண்மை அலுவலர் செல்வம் ஆகியோர் விவசாயிகளின் சந்தேகங் களுக்கு பதில் அளித்தனர். பயிற்சி முகாமில் பி.தர்மத்துப்பட்டி, புள்ளிமான்கோம்பை, சேடபட்டி, திம்மரசநாயக் கனூர், ஏத்தக்கோயில், அனுப்பபட்டி, வரதராஜ புரம், கன்னியப்பபிள்ளைபட்டி, ஆண்டிபட்டியை சேர்ந்த 100 விவசாயிகள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் தொட்டையசாமி, பரமானந்தம், பாண்டிதீபா, கோபிநாத் செய்திருந்தனர்.

## ரூ. 90 லட்சம் மஞ்சள் ஏலம்

ராசிபுரம் : நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,865 மூட்டை விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 9,689க்கும், குறைந்த பட்சம், 7,639 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 8,539க்கும், குறைந்த பட்சம், 6,539 ரூபாய்க்கும் ஏலம்போனது.பனங்காலி ரகம், அதிக பட்சம், 17 ஆயிரத்து, 009க்கும், குறைந்தபட்சம், 12 ஆயிரத்து 071 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 90 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## முப்போகம் பலன் தரும் திசு வாழை



விவசாயத்தை பெரிதாக நினைத்து வாழ்ந்த விவசாயிகள் எல்லாம் அவற்றை பிளாட் போட்டு விற்று வருகின்றனர். விளை நிலத்தை

சீரமைத்து வாழை விவசாயம் மூலம் வருமானத்தை பெருக்கி வருகிறார் காரைக்குடி, அரியக்குடி வளன் நகர் விவசாயியும் முன்னாள் ராணுவ வீரருமான ஆரோக்கியசாமி. மொத்தமுள்ள 4 ஏக்கரில் ஒரு ஏக்கரில் வாழை, 1.5 ஏக்கரில் நெல், ஒரு ஏக்கரில் தென்னை விவசாயம் மேற்கொண்டுள்ளார். தினந்தோறும் வாழ்வாதாரத்தை வாரி வழங்கும் வெண்டை, கத்தரி விவசாயத்தை அரை ஏக்கரில் செய்து வருகிறார். திசுவாழை பயிரிட்டுள்ள இவர் அதன் மூலம் ஆண்டுக்கு ரூ.4 லட்சம் லாபம் பார்த்து வருகிறார். அவர் கூறியது: ஜி-9 வகை திசு வாழை தோட்டக்கலை துறை உதவி வேளாண் அலுவலர் மங்களசாமி மூலம் எனக்கு கிடைத்தது. கன்றுகள் நம்முடைய வாழை போன்று அல்லாமல் சிறிய செடி போல இருக்கும். 11 மாதத்தில் காய்ப்பு எடுக்க ஆரம்பித்து விடலாம். பச்சை பழ வாழை பயிரிட்டுள்ளேன். ஒரு தாரில் 135 முதல் 140 காய்கள் இருக்கும். தற்போதைய நிலையில் தார் ஒன்று ரூ.500 முதல் 600 வரை விற்பனையாகிறது. ஒரு வாழை காய்த்து முடிந்தவுடன் அதை வெட்டிவிட்டு, அதன் பக்க கன்று மூலம் அடுத்த வாழை உருவாகிறது. ஒரு வாழை வைத்தால், மூன்று முறை மகசூல் பெற முடியும். ஆறு அடிக்கு ஒரு கன்று நட வேண்டும். 15-வது நாளில் ஒரு வாழைக்கு 5 கிலோ மாட்டு சாண உரம், 200 கிராம் டி.ஏ.பி., 200 கிராம் பொட்டாஷ் இட வேண்டும். 40-வது நாள் இதே அளவு உரம் இட வேண்டும். 150-வது நாள் 10 கிலோ மாட்டு சாணம் மட்கியது வைக்க வேண்டும். திசு வாழையை பொறுத்தவரை நீர் சத்து அதிகம் தேவை. இதனால் சொட்டு நீர் பாசனம் சிறந்தது. இந்த வாழை 6-வது மாதம் பூக்கும். 8-வது மாதம் காய்க்க துவங்கும். ஒரு ஏக்கருக்கு ரூ.ஒரு லட்சம் செலவாகும். ஆனால், வருமானமோ ரூ.5 லட்சம் வரை கிடைக்கும். ஆண்டுக்கு ஏக்கருக்கு ரூ.4 லட்சம் லாபமாக கிடைக்கும். வாழையின் ஊடே காய்கறி விவசாயமும் மேற்கொள்ளலாம். அதே போல், நெல் விவசாயம் உரம் போடாமல் இயற்கை விவசாயம் மூலம் மேற்கொண்டு வருகிறேன். நெல் நடவுக்கு

முன்பு, வேம்பு இலை, வாகை இலை ஆகியவற்றை நிலத்தில் போட்டு உழுது அதன்பிறகு நடவு பணி துவங்குகிறது. இதனால், இயற்கையான அரிசி நமக்கு கிடைக்கிறது, என்றார். இவரை தொடர்பு கொள்ள 94874 13100. **-டி.செந்தில்குமார், காரைக்குடி.**

***<u>சின்ன சின்ன செய்திகள்</u>***



ஏல விவசாயிகளுக்கு ஸ்பைசஸ் போர்டு வழங்கும் மானியத்திட்டங்கள்: கீழ்கண்ட இனங்களுக்கு மானியம் பெறலாம். ஏலத்தட்டை நாற்றங்கால் அமைக்க, ஏலக்காய் மறுநடவு, நீர் மிதக்கும் நிலைகள் (தொட்டி, கிணறு) மோட்டார், பம்பு செட் வழங்குதல், நீர் தெளிப்பான்/சொட்டுநீர், மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்தல், மண் அரிப்பைத் தடுக்க சுவர் கட்டுதல், ஏலக்காய் உலர்த்தும் இயந்திரம், பண்ணை உபகரணங்கள் வாங்குதல், தேனீ பெட்டி அமைத்தல், சிறந்த வேளாண் செய்முறைகள், நுண்ணுயிர் கள் டிரைகோடெர்மா, சூடோமோனாஸ், மெட்டாரைசியம், வெர்டி சிலியம், பேவேரியா பேசியான பேசிலியோ மைசெஸ், பச்சை மிளகாய் பிரிக்கும் இயந்திரம், பாலிதீன் விரிப்புகள் (மிளகு, மிளகாய், மஞ்சள் உலர்த்தி) மிளகு உலர்த்த மூங்கில் பாய்கள், கிராம்பு/மிளகு பறிக்க ஏதுவான ஏணி, மிளகு சுத்தம் செய்ய தரம் பிரிக்கும் இயந்திரம். தொடர்புக்கு: தமிழகத்திலுள்ள ஸ்பைசஸ் போர்டின் கள அலுவலகங்கள் - போடிநாயக்கனூர் - 04546 - 280317, வத்தலக்குண்டு- 0453 - 262 733, கோயம்புத்தூர் - 0422 - 227 2300, ஈரோடு- 0424 - 227 2300, நாகர்கோவில் - 0984 788 7464. இதர அலுவலகங்கள்: இணை இயக்குநர், போடிநாயக்கனூர் - 04546 - 280 317, துணை இயக்குநர், திண்டுக்கல் - 0451 - 242 0626, இணை இயக்குநர், கோயம்புத்தூர் - 0422 - 247 4430. மாம்பழத்தை விட மாங்காய்க்கு அதிக விலை :

தமிழகத்தில் விளையும் கோடை மாங்காய்க்கு கேரளாவிலும், தமிழகத்தின் தலைநகரமான சென்னையிலும் நல்ல விலை கிடைக்கிறது. இதனால் கிருஷ்ணகிரி மாவட்ட மா விவசாயிகள் கோடைக்காயை குறி வைத்து அடிக்கிறார்கள். ஏக்கருக்கு 3-4 லட்சம் வரை சம்பாதிக்கிறார்கள். கோடை மாங்காய்க்கு ஏற்ற இரகங்கள்: கோடைப்பருவ மாங்காய்களில் பெரும்பகுதி காய்கறியாகவும், மீதி ஊறுகாய்க்குமாக விற்கப்படுகிறது. காய்கறி பயிருக்கு பெரும்பாலும் பெங்களூரா (தோத்தாபுரி / கல்லாமை) என்ற ரகத்தையே மக்கள் விரும்புகிறார்கள். வியாபாரிகள் வாங்குகிறார் கள். செந்தூர ரகமும், நீலம் (காசாலட்டு) ரகமும் காய்கறிக்காக விற்கப்படுகிறது. கிழக்கு கடற்கரையோர பகுதிகளில் ருமானி ரகம் ஆண்டு முழுவதும் காய்க்கிறது. காயாகவே நல்ல விலைக்கும் போகிறது. சீரி என்பது வறட்சியைத் தாங்கி வளரும். நாட்டு ரகம். ஊறுகாய்க்கு விரும்பி வாங்கப்படுகிறது. கத்தேமார் என்பது பெரிய காய்கள் ரகம். இது ஊறுகாய்க்கு உரித்தான ரகம். நாம் பழத்துக்காக பயிரிட்டால் பூத்ததிலிருந்து 90 நாட்களில் அறுவடை செய்கிறோம். 100 நாட் களானால் கொம்பிலேயே பழுத்து விடும். நாம் காய்க்காக பயிரிட்டால் 65 - 70 சதம் முதிர்ச்சியே போதும். அதாவது பூத்ததிலிருந்து 70 நாட்களிலேயே அறுவடை செய்யலாம். காய்கள் அறுவடை செய்யும் போது பூத்த 60ம் நாளிலிருந்து 90ம் நாள் வரை 7-8 தடவைகளில் கொஞ்சம் கொஞ்சமாக முற்றிய காய்களை மட்டும் பறித்து அனுப்ப வேண்டும். ஆளில்லாமல் கதிர் அடிக்கும் இயந்திரம்: முன்னதாக இந்த மெஷினை அன்னபூர்ணா நிறுவனம் வடிவமைத்து தயாரித்து விநியோகித்துள்ள மக்காச்சோளம், சூரியகாந்தி, கம்பு போன்ற வற்றிற்கான கதிரடிக்கும் இயந்திரத்தை மாற்றியமைக்க முடியாத நிலையில் தற்போது அன்ன பூர்ணா வடிவமைத்துள்ள "பலபயிர் கதிரடிக்கும் இயந்திரத்தில்' தானியக் கதிர்களை லோடுபண்ண ரோபோ போன்ற தனி இணைக்கருவி இயக்கப்பட்டுள்ளது. இதன் விலை ரூ.5.70 லட்சம் முதல் மெஷினைத் தற்போது கர்நாடகாவில் விற்பனை

செய்துள்ளது. வரவேற்பு அமோகமாக உள்ளது. பொதுவாக இதனை வாங்கி வாடகைக்கு விட்டு சம்பாதிக்கும் நெல் அறுவடை இயந்திர உரிமையாளர்கள் இதுவரை அதிக அளவில் முன்பணம் கொடுத்து ஆர்டர்களைப் பதிவு செய்துள்ளனர். மேலும் விவரங்களுக்கு : திரு.கீ.வெங்கடபதி, ஸ்ரீஅன்ன பூர்ணா அக்ரோ இன்டஸ்ட்ரீஸ், 2/65, கள்ளப்பாளையம் கிராமம், செட்டிபாளையம் போஸ்ட், கோயம்புத்தூர்-641 201. போன் : 94433 31670. - **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>இயற்கை விவசாயத்தில் பார்த்தீனியம்</u>



பல தென்னந்தோப்புகளில் விவசாயிகள் பார்த்தீனியத்தை ஒரு எதிரியாக பாவித்து அதனை கங்கணம் கட்டிக்கொண்டு அழித்திட அதிக காசு செலவு செய்து களைக்கொல்லி மருந்து தெளித்து கடும் நஷ்டத்துக்கு ஏன் மண்ணின் உயிர்க்குலங்கள் நாசமாகி மலடாகி தென்னந்தோப்பே வறண்ட காடு போலக்காட்சியளித்திடச் செய்கிறார்கள். இறைவன் தந்த வரங்கள் தான் தாவரங்கள். அதில் தானாக வளரத் திறன் கொண்ட தாவரமான பார்த்தீனியம் நம்மால் தான் நிலத்துக்கு கொண்டு வரப் பட்டது என்பது விசித்திரமான உண்மையாகும். அரை அடி முதல் 3 அடி வரை மண் கண்டத்துள்ளே அங்கிங்கெணாதபடி களை விதைகள் பல்கி பரவிக் கிடப்பதே அரைகுறையான மட்காத குப்பை உரத்தை இடுவதால் தான். ஆம், கால்நடை உண்ட களைச்செடி விதைகள் சாணத்துடன் வெளியே வந்து பத்திரமாக மேற்பரப்பில் பதப்படுத்தப்பட்டு பிறகு எடுத்து வீசும்போது நீரைக்கண்டதும் குப்பென்று வளர்ந்து விடுகிறது. எனவே களைகள் வரும் இந்த வழியை மாற்றி யோசித்து மண்புழு உரமாக இட்டால் நிச்சயம் களைக்கு வேலையில்லை. அப்படியே களைகள் வந்தாலும் அதனை முறையாக சேகரம் செய்து மட்கம் செய்து மகத்தான உரமாக மீளப்பயன்படுத்தலாம். இதற்கு எந்தக் களை யானாலும் விதிவிலக்கல்ல. நல்ல இலைப்பரப்பு அதிகம் கொண்ட பசுந்தழைகள் அடங்கிய பலவித மரங்களின் இலைகளையும் சேகரம்

செய்து பார்த்தீனியம் மற்றும் இதர புல்வகைச் களைகளையும் களை நீக்கும் கருவிகள் கொண்டு அறுத்து வதங்க வைத்து அப்புறப்படுத்தி பதப்படுத்தி மண்புழு உரக்குழியில் இட்டு மண்புழு உரமாக மாற்றலாம். அல்லது இதற்கு கம்போஸ்ட் குழி தயாரித்திட எல்லா இடத்திலும் வாய்ப்புள்ளது. நீளம் 15 அடி அகலம் 8 அடி மற்றும் ஆழம் 3 அடி உள்ள குழிகள் தோண்டினால் ஒரு ஏக்கருக்குத் தேவையான உரம் பெற வாய்ப்புள்ளது. திடல்கள், சேமிப்பு கூடங்கள் மற்றும் நடைபாதைகள், கல்வி சாலைகள், பூங்காக்கள் பேருந்து நிறுத்தங்கள் இங்கு வளர்ந்துள்ள பார்த்தீனியத்தை 10 லிட்டர் தண்ணீரில் 1.5 கிலோ சாப்பாட்டு உப்பு கரைத்து தெளித்து சுத்தமாக அழிக்கலாம். உயிரியல் முறைப்படி "சைக்கோகிரம்மர்' எனும் புள்ளி உடைய ஈச்சங்காய் போன்ற மஞ்சள் வண்ண வண்டுகளை சேகரம் செய்து பார்த்தீனியம் உள்ள இடத்தில் மெதுவாக அவற்றை சுத்தமாக அழிக்கலாம். களை வரும் முன்பே முந்தி ஊடுபயிர், மூடு பயிர், வரப்பு பயிர் மற்றும் நிலப்போர்வை அமைத்தல் மூலம் பார்த்தீனியம் தரும் பாதிப்பை வெகுவாகக் குறைக்கலாம். மேலும் விவரம் பெற 98420 07125 எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**- டாக்டர். பா.இளங்கோவன். உடுமலை, திருப்பூர் மாவட்டம்.**

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நடுங்கும் குளிர் போச்சு; கடும் வெயில் வந்தாச்சு விற்பனைக்கு குவிந்தன தர்பூசணி பழங்கள்</u>**

திருவள்ளூர், : திருவள்ளூர் மாவட்டத்தில் நடுங்கும் குளிர் போய், கடும் வெயில் துவங்கியதால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி உள்ளனர். உடலின் சூட்டை தணிக்க விரும்புவோருக்கு தர்பூசணி பழங்களும் விற்பனைக்காக ஆங்காங்கே குவிக்கப்பட்டு உள்ளன. திருவள்ளூர் மாவட்டத்தில் நேற்று வெயில் கொளுத்தியது. தமிழகத்தில், மார்கழி, தை

மாதங்களில் பனியின் தாக்கம் அதிகப்படியாக இருக்கும். இரவு நேரங்களில், பனியில் இருந்து தப்பிக்க வீட்டை விட்டு வெளியில் செல்வதற்கே மக்கள் தயங்குவர். பனிக்காற்று பலரின் உடல் நிலையை பதம் பார்த்தது. கடந்த சில நாட்களாக பனியின் அளவு குறைந்து வருகிறது. அதேவேளையில், வெயிலின் கொடுமை நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுகிறது. பனியில் அவதிப்பட்ட மக்கள், தற்போது வெயில் கொடுமையால் அவதிப்படுகின்றனர். ஆங்காங்கே நின்று கொண்டிருந்த நிழல் தரும் மரங்கள் அழிந்து போனதால் காற்றும் குறைவாகவே வீசுகிறது, தினமும் காலையில் இரண்டு மணி நேரம் மின் தடை உள்ளதால் நிம்மதியாக பொழுதை கழிக்க முடியாமல் வீடுகளில் மக்கள் சிரமப்படுகின்றனர். பல்வேறு பணிகளுக்காக வெளியில் செல்வோர், வெயிலில் இருந்து தப்பிக்க குடையை பிடித்தபடியும், கைக்குட்டையை தலையில் கட்டியபடியும், முகத்தை மறைத்தவாறும் உலா வருகின்றனர். கோடை வெயிலின் தாக்கத்தை தணிக்க தர்பூசணி கடைகளும் ஆங்காங்கே முளைத்துள்ளன. வாகனங்களில் செல்வோர், இந்த கடைகளில் தர்பூசணியை வாங்கி சாப்பிட்டு, உடல் வெப்பத்தை தணித்துக் கொள்கின்றனர்.

## <u>பன்னீர் திராட்சை கிலோ ரூ.60க்கு விற்பனை</u>

தொண்டாமுத்தூர், : கோவை அருகே தீத்திபாளையம், மாதம்பட்டி, குப்பனூர் உட்பட 25க்கும் மேற்பட்ட கிராமங்களில் 800 ஏக்கர் பரப்பளவில் விதையுடன் கூடிய கருப்பு பன்னீர் திராட்சை சாகுபடி ஆண்டுதோறும் நடந்து வருகிறது. இங்கு உற்பத்தியாகும் திராட்சைகள் பெட்டிகளில் பதப்படுத்தப்பட்டு, கேரளா மாநிலத்திற்கு அதிகளவில் அனுப்பபடுகின்றன. திராட்சை சராசரியாக கிலோ ரூ.40 வரைக்கும் விற்பனையாவது வழக்கம். ஆனால் தற்போது திராட்சை கிலோ ரூ.60க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து கோவை மாவட்ட திராட்சை

உற்பத்தியாளர் சங்க தலைவர் விஜயன் கூறுகையில், ‘‘கடந்த நவம்பரில் பெய்த மழையால் பூ மற்றும் பிஞ்சுகள் அழுகின. இதனால் நூற்றுக் கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டு இருந்த திராட்சை கொடிகள் வீணாகியது. இதன் காரணமாக தற்போது திராட்சை உற்பத்தி முற்றிலும் குறைந்து உள்ளது. இதனால் விலை உயர்ந்து உள்ளது. இந்த விலை உயர்வால் பெரிதாக விவசாயிகளுக்கு லாபம் இல்லை. கொள்முதல் தொகை மட்டுமே கிடைக்கும்,’’ என்றார்.

## <u>திருச்செந்துறையில்  வாழைத்தார் பொது ஏலம்</u>

திருச்சி, : திருச்செந்துறை வணிக வளாகத்தில் இன்று வாழைத்தார் பொது ஏலம் நடை பெறுகிறது. திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் ஸ்ரீரங்கம் தாலுகா திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது ஏலம் இன்று (செவ்வாய்) நடைபெறுகிறது. இந்த பொது ஏலத்தில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதோடு எந்தவித கமிஷனுமின்றி அவர்களுக்கு உடனுக்குடன் பணமும் பட்டுவாடா செய்யப்படுகிறது. இங்கு வாழைத்தார் கொண்டு வரும் விவசாயிகள் அன்று காலை 11 மணிக்குள் முன்பதிவு செய்ய வேண்டும். திருச்சி மாவட்டம் அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம் வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் மட்டுமல்லாமல் டெல்டா மாவட்ட விவசாயிகளும் வாழைத்தார்களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழைவணிக வளாகத்துக்கு கொண்டு வந்து பொது ஏலத்தில்பங்கேற்கலாம்.

## <u>துறையூரில்  பருத்தி ஏலம்</u>

திருச்சி, : துறை யூரில் நாளை பருத்தி மறைமுக ஏலம் விடப்படுகிறது. திருச்சி மாவட்டம் துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த வருடம் முதல் பருத்தி மறைமுக ஏலம் தொடங்கப்பட்டது. இதேபோல் இவ்வருடம் தற்போது பருத்தி அறு வடை துவங்கியுள்ள தால் துறையூரில் வாரத் தில் புதன்கிழமை தோறும் மறைமுக ஏலம் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் நாளை (11ம்தேதி) நடைபெறும் இந்த மறைமுக ஏலத்தில் துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை, முசிறி, மண்ணச்சநல்லூர் வட்டாரங்களில் பருத்தி அறுவடை செய்து கொண்டிருக்கும் விவசாயிகள், துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத் திற்கு வந்து, மறை முக ஏலம் மூலம் நல்ல விலை பெற்று பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>**32 டன் சின்ன வெங்காயம் ரூ.4.90 லட்சத்திற்கு ஏலம்**</u>

பெரம்பலூர், : செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் 32 டன் சின்ன வெங்காயம் ரூ.4.90 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது. இதுபற்றி பெரம்பலூர் கலெக்டர் தரேஸ்அகமது தெரிவித்திருப்பதாவது: பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் முலம் 8ம்தேதி (ஞாயிறு) அன்று திறந்த முறை ஏலம் நடத்தப்பட்டது. இதில் நக்கசேலம், லாடபுரம், அம்மாப்பாளையம், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், கூத்தனூர், சத்திரமனை, பொம்மனப் பாடி ஆகிய கிராமங்களைச்சேர்ந்த 112 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை திறந்த முறை ஏலத்திற்குக் கொண்டுவந்து விற்பனை செய்தனர். இதில் திருச்சி, ஈரோடு, பாவூர் சத்திரம், நெய்வேலி, செட்டிக் குளம், நாட்டார்மங்கலம், சத்திரமனை பொம்மனப்பாடி, தேனூர், சீதேவிமங்களம், கூத்தனூர், ஆலத்தூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 13 வியாபாரிகள் 405 மூட்டைகள் அதாவது 32,477 கிலோ சின்ன வெங்காயத்தினை ஏலத்தில் எடுத்தனர். இந்த ஏலத்தில் சின்ன வெங்காயம் அதிகபட்சமாக கிலோ ரூ.29க்கும், விதை வெங்காயம் அதிகப்பட்சமாக கிலோ ரூ.30க்கும், சராசரியாக ஒரு கிலோ ரூ.15க்கும் விற்பனையானது. இதன்மூலம் ரூ.4,88,024க்கு விற்பனை நடைபெற்றது. அனைத்து விவசாயிகளுக்கும் அன்றே பணம்பட்டுவாடா செய்யப்

பட்டது. செட்டிக்குளம் வணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்தமுறை ஏலம் நடைபெற்று வருகிறது. எனவே விவசாயி கள் தங்களது வெங்காய விளைபொருளை நன்கு சுத்தப்படுத்தி, தரம் பிரித்து இன்று (10ம்தேதி) காலை 10 மணிக்குள் கொண்டுவந்து விற்பனை செய்து பயன்பெறலாம். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## எள் சாகுபடியில் தொழில்நுட்பம் கடைபிடித்தால் குறைவான செலவில் அதிக மகசூல்

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் மாசிப்பட்ட எள் சாகுபடியில் தொழில்நுட்பங்களை கடைபிடித்தால் குறைவான செலவில் அதிக மகசூல் பெறலாம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப் பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: குறைந்த வயதில் (85 நாட்கள்) அதிக நீர் தேவை யின்றி குறைவான சாகுபடி செலவில் அதிக லாபம் ஈட்டக்கூடிய பயிர் எள். இப்பயிர் சாகுபடி செய்வதற்கு பிப்ரவரி - மார்ச் மாத (மாசி பட்டம்) பருவமே ஏற்ற தருணம். இப்பருவத்துக்கு ஏற்ற ரகங்கள் கோ.1, டி.எம்.வி 4, மற்றும் 6 (வயது 85- 90 நாட்கள்), டி.எம்.வி 3 (80- 85 நாட்கள்), வி.ஆர்.ஐ 1 (70- 75 நாட்கள்) ஆகும். இதற்கு முதலில் வயலை நன்கு புழுதிபட உழவு செய்ய வேண்டும். கடைசி உழவுக்குமுன் 5 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் உரம் இட வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான 2 கிலோ விதையை தேர்வு செய்து விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்துவதற்காக டிரைக்கோ டெர்மாவிரிடி உயிர் பூசானகொல்லி மருந்து ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற விகிதத்தில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். பின்னர் விதைப்பதற்கு முன்பாக ஒரு பாக்கெட் அசோஸ்பயிரில்லம் நுண்ணுயிர் பொட்டலத்தை அரை லிட்டர் ஆரிய அரிசி கஞ்சியுடன் கலந்து அதை விதையுடன் சேர்த்து நேர்த்தி செய்து நிழலில் உலர்த்தி பின்னர் விதைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான 14:9:9 என்ற

விகிதத்தில் தழை, மணி, சாம்பல் சத்துகளை (31 கிலோ யூரியா, 56 கிலோ சூப்பர், 15 கிலோ பொட் டாஷ்) முழுவதுமாக அடியுரமாக இடவேண்டும். மேலுரம் இட தேவை யில்லை. மாங்கனீசு சல்பேட் என்ற நுண்ணூட்ட உரத்தை ஏக்கருக்கு 2 கிலோ வீதம் 18 கிலோ மணலுடன் கலந்து வயலில் சீராக தூவி மேலாக மூட வேண்டும். பின்னர் 15ம் நாள் 15 செ.மீ. இடைவெளி வைத்து செடியை களைத்துவிட வேண்டும். விதைத்த 30ம் நாள் 30 செ.மீ. இடை வெளி வைத்து மீண்டும் ஒருமுறை செடியை களைத்துவிட வேண்டும். ஒரு சதுரமீட்டரில் 11 செடிகள் மட் டும் இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். இதனால் செடிகள் படர்ந்து வளர்ந்து அதிக கிளைகள் வெடித்து காய்கள் பிடிக்க உதவுகிறது. பாசனத்தை பொறுத்தவரை விதை விதைத்தவுடன் ஒரு முறையும், மண் வளத்தை பொறுத்தவரை 7ம் நாள் ஒரு முறையும், விதைத்த 25ம் நாள் ஒரு முறையும், பூக்கும் தருணம் ஒரு முறையும், காய் பருவத்தில் ஓரிரு முறையும் நீர்பாசனம் செய்ய வேண்டும். இவ்வாறு தொழில்நுட்பங்களை கடைபிடித்தால் எள் பயிரில் குறைந்த செலவில் அதிக லாபம் பெறலாம்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நாமகிரிப்பேட்டையில் 1,865 மஞ்சள் மூட்டைகள் ரூ.90 லட்சத்திற்கு ஏலம்**



நாமகிரிப்பேட்டையில், 1,865 மஞ்சள் மூட்டைகள் ரூ.90 லட்சத்திற்கு ஏலம் போனது. மஞ்சள்ஏலம் நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே

உள்ள நாம கிரிப்பேட்டை ஆர்.சி.எம்.எஸ். கிளை அலுவலக வளாகத் தில் ராசிபுரம் தாலூகா கூட் டுறவு உற்பத்தியாளர் மற்றும் விற்பனைச் சங்கம் சார்பில் மஞ்சள் ஏலம் செவ்வாய்க் கிழமை தோறும் நடந்து வரு கிறது. வழக்கம்போல் நேற்றும் மஞ்சள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் நாமகிரிப் பேட்டை, ஒடுவன் குறிச்சி, புதுப்பட்டி, பேளுக்குறிச்சி, அரியாக்கவுண்டம்பட்டி, ஆத்தூர், ஊனத்தூர் உள்பட பல இடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் மஞ்சளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு கொண்டு வந்திருந்தனர். இதேபோல ஏலத்தில் சேலம், ஈரோடு, நாமகிரிப்பேட்டை, ஒடுவன் குறிச்சி உள்பட பல பகுதி களைச் சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டனர். ரூ.90 லட்சத்திற்கு விற்பனை இந்த ஏலத்தில் விரலி ரகம் 1,172 மூட்டைகளும், உருண்டை ரகம் 658 மூட்டைகளும், பனங்காளி ரகம் 35 மூட்டைகளும் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் விரலி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.7,639-க்கும் அதிகபட்சமாக ரூ.9,689-க்கும், உருண்டை ரகம் குறைந்த பட்சம் ரூ.6,539-க்கும் அதிகபட்சமாக ரூ.8,539-க்கும், பனங்காளி ரகம் குறைந்த பட்சம் ஒரு குவிண் டால் ரூ.12,071-க்கும் அதிக பட்சமாக ரூ.17,009-க்கும் ஏலம் விடப்பட்டது. நேற்று நடைபெற்ற ஏலத்தில் 1,865 மஞ்சள் மூட்டைகள் ரூ.90 லட்சத்திற்கு ஏலம் போனதாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.